மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

O.S. No. 69 / 2022

வா.சா.2 – தவமணி 05.03.2025

குறுக்கு விசாரணை :–

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. வாதி நாட்சி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாகக்ல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு நான் விபரம் சொல்லவில்லை வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி மற்றும் பிரதிவாதியை எந்த வகையில் தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி வயலுக்கு தெற்கே எனது நிலம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு சர்வே எண் , விஸ்தீரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிலம் சம்மந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிராதில் சொத்து விபரத்தில் தாவா சொத்தின் தெற்கே ராக்குக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே எனக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லை என்றும் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு கீழ்புறம் லெட்சுமி நிலம் உள்ளது மேல்புறம் பாப்பா நிலம் உள்ளது வடக்கே முனியம்மாள் நிலம் உள்ளது தெற்கே ராக்கு நிலம் உள்ளது. மேற்படி நான்குமாலில் எனக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதாக இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பற்றி எனக்கு

எதுவும் தெரியாது நான் வாதி கேட்டுக்கொண்டன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை